# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# இயக்கூர்திகள் சட்டங்கள் – நிருவாகம்

## மானியக் கோரிக்கை எண். 25

## அறிவிப்புகள்

## 2016–2017


**எம். ஆர். விஜயபாஸ்கர்**

போக்குவரத்துத் துறை அமைச்சர்

1. வாகனங்களின் அதிவேகத்தைக் கண்டறிய, போக்குவரத்துத் துறையின் செயலாக்க அலுவலர்களுக்கு 10 வேகம் கண்டறிந்து பதிவு செய்யும் கருவிகள் (Speed Radar Guns) வழங்குதல்

**Supply of 10 Speed Radar Guns to the Enforcement Officials of the Transport Department**

சாலைகளில் வேகமாக செல்லும் வாகனங்களை கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக போக்குவரத்துத் துறையில் பணிபுரியும் செயலாக்க அலுவலர்களுக்கு அதிவேக வாகனங்கள் கண்டறியும் கருவிகள் அதாவது Speed Radar Guns வழங்குவது அவசியமாகிறது. ஏற்கெனவே மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு சரகங்களுக்கு வேகம் கண்டறிந்து பதிவு செய்யும் கருவிகள் 2 வழங்கப்பட்டுள்ளன. எனவே மீதமுள்ள 10 சரகங்களுக்கும் வேகம் கண்டறிந்து பதிவு செய்யும் கருவிகள் (Speed Radar Guns) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, 95 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

2. திருவள்ளூர் மாவட்டம்– பாலவாக்கம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம்– காளிக்கோயில் ஆகிய இடங்களில் புதிய சோதனைச் சாவடிகள் அமைத்தல்

## Creation of new Check posts at Palavakkam in Tiruvallur District and Kalikoil in Krishnagiri District

தமிழ்நாட்டின் எல்லையில் அண்டை மாநிலங்களிலிருந்து நுழையும் வாகனங்களை தணிக்கை செய்யும் பணிகளை மேற்கொள்ள, போக்குவரத்துத் துறையில் சரக அலுவலர்களின் கட்டுப்பாட்டில் முறையே சென்னை வடக்கு சரகத்தில் 3 சோதனைச் சாவடிகளும், விழுப்புரம் சரகத்தில் ஒரு சோதனைச் சாவடியும், வேலூர் சரகத்தில் 5 சோதனைச் சாவடிகளும், ஈரோடு சரகத்தில் ஒரு சோதனைச் சாவடியும், கோயம்புத்தூர் சரகத்தில் 6 சோதனைச் சாவடிகளும், மதுரை சரகத்தில் ஒரு சோதனைச் சாவடியும் மற்றும் திருநெல்வேலி சரகத்தில் 2 சோதனைச் சாவடிகளும் ஆக மொத்தம் 19 சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன.

மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளை மீறும் வாகனங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கும் வகையில், திருவள்ளூர் மாவட்டம் பாலவாக்கம் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம் காளிக்கோயில் ஆகிய இடங்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, புதிய சோதனைச் சாவடிகள் 40 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்படும்.

3. புதுக்கோட்டை மாவட்டம்–ஆலங்குடி, காஞ்சிபுரம் மாவட்டம்–திருக்கழுக்குன்றம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம்–நத்தம் ஆகிய இடங்களில் உள்ள பகுதி அலுவலகங்களுக்கு தலா ஒரு ஜீப்பு வழங்குதல்.

**Purchase of 3 Jeeps one each for the Unit Offices at Alangudi in Pudukottai District, Thirukazhukundram in Kancheepuram District and Natham in Dindigul District.**

போக்குவரத்துத் துறையில் இயங்கி வரும் 60 பகுதி அலுவலகங்களுக்கு ஜீப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் புதுக்கோட்டை மாவட்டம் –ஆலங்குடி, காஞ்சிபுரம் மாவட்டம் –திருக்கழுக்குன்றம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம்–நத்தம் ஆகிய இடங்களில் பகுதி அலுவலகங்கள் துவக்க ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி, 3 பகுதி அலுவலகங்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, தலா ஒரு ஜீப் வீதம் 3 ஜீப்புகள் 28 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

4. **20 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு பல்லூடக படக்கருவி (Multimedia LED Projector) வழங்குதல்.**

## Provision of Multimedia LED Projectors for 20 Regional Transport Offices.

அரசின் பல்வேறு திட்டங்கள், அறிவிப்புகள், சாலைப் பாதுகாப்புத் தகவல்கள், போக்குவரத்து விதிகளைத் தெரியப்படுத்துதல் மற்றும் கூட்டங்களை நடத்துவதற்கு வசதியாக 20 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கு பல்லூடக படக்கருவி (Multimedia LED Projector) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, 14 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**எம். ஆர். விஜயபாஸ்கர்**
**போக்குவரத்துத் துறை அமைச்சர்**